126/DD/20

T.C-103

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## THE CRIMINAL JUDICIAL TEST PART – I INDIAN PENAL CODE (DETAILED APPLICATIONS)

(Without Books)

Maximum Time : 2 hours

Maximum Marks : 80

## *IMPORTANT INSTRUCTIONS*

### OBJECTIVE TYPE
### கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB :** **Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**
இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. The fundamental principle of criminal liability is embodied in the maxim "actus non facit reum nisi mens sit rea" was developed by

(A) Equity Courts

(B) Common Law Courts

(C) Sadar Nizamat Courts

(D) None of the above

சட்ட முதுரையில் அடங்கியுள்ள குற்ற பொறுப்படைவின் அடிப்படைக் கோட்பாடு "குற்றமனமில்லாச் செயல் குற்றமென ஆவதில்லை" எதன் மூலம் முன் வைக்கப்பட்டது

(A) நேர்மைநெறி நீதிமன்றங்கள்

(B) பொது சட்ட நீதிமன்றங்கள்

(C) சாதர் நிஜாமத் நீதிமன்றங்கள்

(D) மேற்காண் எதுவுமன்று

2. How many types of punishments have been prescribed under the Indian Penal Code?

(A) Three

(B) Six

(C) Five

(D) Four

இந்திய தண்டனைச் சட்டத்தில் எத்தனை வகை தண்டனைகள் வகுத்துரைக்கப்பட்டுள்ளன?

(A) மூன்று

(B) ஆறு

(C) ஐந்து

(D) நான்கு

3. The maximum 'ignorantia juris no excusat' means

(A) ignorance of law is no excuse

(B) ignorance of fact is no excuse

(C) ignorance of law is an excuse

(D) ignorance of fact is an excuse

"சட்டம் பற்றிய அறியாமை மன்னிக்க இயலாது" எனும் முதுமொழி பொருள்படுவது

(A) சட்டம் பற்றிய அறியாமை மன்னிக்க முடியாது

(B) பொருண்மை பற்றிய அறியாமை மன்னிக்க முடியாது

(C) சட்டம் பற்றிய அறியாமை மன்னிக்க இயலும்

(D) பொருண்மை பற்றிய அறியாமை மன்னிக்க இயலும்

4. The Indian Penal Code received the Governor General's assent?

(A) October 3, 1850 (B) October 5, 1960

(C) October 6, 1860 (D) October 7, 1865

இந்திய தண்டனைச் சட்டம் தலைமை ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்ற ஆண்டு

(A) அக்டோபர் 3, 1850 (B) அக்டோபர் 5, 1960

(C) அக்டோபர் 6, 1860 (D) அக்டோபர் 7, 1865

5. To which of the following, the law of presumption applies?

(A) Volenti non fit injura

(B) Mens rea

(C) De minimus non curat lex

(D) None of the above

கீழ்கண்டவற்றில் சட்ட வழி துணிவு எதற்கு பொருந்துகிறது?

(A) இசைந்தேற்றல் தீங்காகாது

(B) குற்ற மனம்

(C) சட்டத்திற்கில்லை அற்பத்தில் அக்கறை

(D) மேற்காண் எதுவுமன்று

6. The doctrine 'volenti non fit injura' is contained in

(A) Section 87 of IPC

(B) Section 88 of IPC

(C) Section 89 of IPC

(D) All the above

"இசைந்தேற்றல் தீங்காகாது" எனும் கோட்பாடு

(A) இ.த.ச. பிரிவு 87 ல் அடங்கியுள்ளது

(B) இ.த.ச. பிரிவு 88 ல் அடங்கியுள்ளது

(C) இ.த.ச. பிரிவு 89 ல் அடங்கியுள்ளது

(D) மேற்காண் அனைத்தும்

7. The right to provide defence is available with respect to

(A) harm to body

(B) harm to movable property

(C) harm to immovable property

(D) all the above

தற்காப்புரிமை கிடைக்கப் பெறுவதானது

(A) மனித உடலுக்கு தீங்கு

(B) அசையும் சொத்துக்கு தீங்கு

(C) அசையாச் சொத்துக்கு தீங்கு

(D) மேற்காண் அனைத்தும்

8. The consent is not a valid consent under Section 90

(A) if given under a fear of injury or misconception of fact

(B) if given by a person of unsound mind

(C) if given by a child below 12 years of age

(D) all the above

பிரிவு 90 ன் கீழான இசைவு ஓர் செல்லத்தக்க இசைவு அல்ல

(A) கேடு ஏற்படும் அச்சத்தினால் அல்லது பொருள் பற்றிய தப்பெண்ணத்தினால் சம்மதம்

(B) மனநிலை குலைந்தவரால் கொடுக்கப்படும் இசைவு

(C) அகவை 12 க்கு குறைவான குழந்தையினால் அளிக்கப்படும் இசைவு

(D) மேற்காண் அனைத்தும்

9. Right of private defence is not available

(A) against any act which in itself is not an offence

(B) against any act which is not legal wrong

(C) against any act which is a moral wrong

(D) all the above

தற்காப்புரிமை கிடைக்கப் பெறாது

(A) ஓர் குற்றம் அல்லாத ஏதேனும் செய்கைக்கு எதிராக

(B) சட்டப்படி தீங்கு அல்லாத ஏதேனும் செய்கைக்கு எதிராக

(C) ஒழுக்க தீங்கு அல்லாத ஏதேனும் செய்கைக்கு எதிராக

(D) மேற்காண் அனைத்தும்

10. Which of the following is a fundamental maxim of natural justice?

(A) audi alteram partem

(B) nullum tempus occurrit regi

(C) memo debet esse judes in propria causa sua

(D) Both (A) and (C)

பின்வருவனவற்றில் இயற்கை நீதிக்கான சட்ட முதுமொழி எது?

(A) இரு தரப்பையும் கேட்டல்

(B) கால இடைவெளி அரசுரிமையைத் தடை செய்திடாது

(C) ஒரே வழக்கு மூலத்திற்காக ஒரே நபர் இருமுறை தொல்லைப்படுத்தப்படுதல் கூடாது

(D) (A) மற்றும் (C) இரண்டும்

11. Which of the following is the facet of audi alteram partem?

(A) notice of the case to be met

(B) good faith

(C) opportunity to explain

(D) both (A) and (C)

கீழ்க்கண்டவற்றில் இரு தரப்பு கேட்டலுக்கு கூறு எது?

(A) எதிர் நோக்கப்படும் வழக்கின் அறிவிப்பு

(B) தன்னம்பிக்கை

(C) விளக்கிட வாய்ப்பு

(D) (A) மற்றும் (C) இரண்டும்

12. Abettor is a person

(A) who commits the offence

(B) who instigates the commission of offence

(C) against whom the offence is committed

(D) who is innocent

உடந்தையாளர் என்பவர்

(A) குற்றத்தினை செய்பவர்

(B) குற்றத்தினை செய்திட தூண்டுபவர்

(C) எவருக்கு எதிராக குற்றம் செய்யப்படுகிறதோ அவர்

(D) அப்பாவி நபர்

13. For an unlawful assembly under Section 141 of IPC, the minimum number of persons required is

(A) Five (B) Seven

(C) Ten (D) Twenty

இ.த.ச. பிரிவு 141 ன் கீழ் சட்ட விரோத கும்பலுக்கு தேவையான நபர்கள்

(A) ஐந்து (B) ஏழு

(C) பத்து (D) இருபது

14. For conspiracy, the minimum number of persons required is

(A) One

(B) Two

(C) Five

(D) No minimum requirement

கூட்டு சதிக்கு தேவையான குறைந்தபட்ச நபர்கள்

(A) ஒன்று

(B) இரண்டு

(C) ஐந்து

(D) குறைந்தபட்சம் வேண்டியதில்லை

15. Which of the following are grievous hurt?

(A) emasculation

(B) permanent disfiguration of face

(C) privation of any member or joint

(D) all the above

கீழ்க்கண்டவற்றில் எது கொடுங்காயம்?

(A) ஆண்மை இழக்கச் செய்தல்

(B) முகத்தினை குலைத்தல்

(C) உடல் உறுப்பு அல்லது எலும்பு மூட்டுத் திறனை இழக்கச் செய்தல்

(D) மேற்காண் அனைத்தும்

16. The word 'person' in IPC SII indicates

(A) any company incorporated or not

(B) any associations incorporated or not

(C) body of persons incorporated or not

(D) all of above

இ.த.ச. பிரிவு 11 ல் "நபர்" எனக் குறிப்பிடப்படுவது

(A) ஏதேனும் வணிக நிறுவனமோ

(B) ஏதேனும் சங்கமோ

(C) ஏதேனும் நபர்களின் கூட்டமைப்போ

(D) மேற்காண் அனைத்தும்

17. Which of the following is not a public servant as per Section 21 of IPC?

(A) Judge

(B) Juryman

(C) Private Company

(D) Municipal Commissioner

இ.த.ச. பிரிவு 21ன் படி பின்வருவனவற்றில் எது பொது ஊழியர் அல்ல?

(A) நீதிபதி

(B) அறங்கூற்றாயர்

(C) தனியார் நிறுவனம்

(D) நகராட்சி ஆணையர்

18. The accused shot dead his father who was abusing his mother and was goint to cut her throat. The accused

(A) acted with vindictive feelings

(B) acted so due to the imminent danger to his mother's life

(C) is not guilty

(D) both (B) and (C)

எதிரி அவரது தாயினை, தந்தை வசவு பொழிந்து அவளது கழுத்தினை வெட்டுவதற்காக எத்தனித்தபோது தந்தையினை சுட்டுக் கொன்றார். எதிரியானவர்

(A) பழி வாங்கும் நோக்கத்துடன் செயல்பட்டார்

(B) அவரது தாயாரின் உயிருக்கு ஆபத்து என்பதனால் செயல்பட்டார்

(C) குற்றமிழைத்தவரல்ல

(D) (B) மற்றும் (C) இரண்டும்

19. The involvement of five or more persons is essential for

(A) Theft
(B) Extortion
(C) Robbery
(D) Dacoity

ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்களின் பங்கேற்பு அவசியம்

(A) திருட்டு
(B) அச்சுறுத்திப் பறித்தல்
(C) வழிப்பறி
(D) கூட்டுக் கொள்ளை

20. Which one of the following is not a "Public Servant"?

(A) Liquidator

(B) A Civil Judge

(C) Member of a Panchayat assisting a Court of Justice

(D) Secretary of a Co-operative Society

கீழ்காண்பவர்களில் எவர் "பொது ஊழியர்" அல்ல?

(A) கலைப்பாளர்

(B) ஓர் உரிமையியல் நீதிபதி

(C) நீதிமன்றத்திற்கு உதவிடும் ஓர் பஞ்சாயத்து உறுப்பினர்

(D) கூட்டுறவு சங்க செயலர்

21. Sex with a girl through fraudulent consent, amounts to

(A) Simple physical assault
(B) Molestation
(C) Attempt to rape
(D) Rape

மோசடியான இசைவுடன் பெண் ஒருவருடன் உடலுறவு

(A) சாதாரண உடல் ரீதியான தாக்குதல்
(B) மானபங்கப்படுத்துதல்
(C) வன்புணர்ச்சி முயற்சி
(D) வன்புணர்ச்சி

22. A who is a citizen of India, commits a murder in Uganda. He can be tried and convicted of murder in any place in India in which he may be found.

(A) Conviction proper
(B) Conviction not proper
(C) Cannot be tried
(D) All of the above

இந்தியக்குடிமகனான 'A' என்பவர் உகாண்டாவில் ஒரு கொலையைச் செய்கிறார். இந்தியாவில் அவர் காணப்படலாகும் எந்த இடத்திலும் அவர் கொலைக்காக விசாரணை செய்யப்பட்டுத் தண்டிக்கப்படலாம்

(A) குற்றத்தீர்ப்பு முறையானது
(B) குற்றத் தீர்ப்பு முறையன்று
(C) விசாரிக்கப்படலாகாது
(D) மேற்காண் அனைத்தும்

23. A Magistrate exercising jurisdiction in respect of a charge on which he has power to sentence, to fine or imprisonment with or without appeal

(A) is a judge
(B) is a munsiff
(C) is a jury
(D) none of the above

ஒரு குற்றச் சாட்டின் மீது, மேல்முறையீட்டுக்கு உட்பட்ட அல்லது உட்பட்டிராத தண்டமோ சிறைத்தண்டனையோ விதிக்க அதிகாரம் பெற்றிருந்து, அதைப் பொறுத்து அதிகாரம் செலுத்துகின்ற ஒரு நடுவர்

(A) ஒரு நீதிபதியாவார்
(B) ஓர் முன்சீப்
(C) ஓர் அறங்கூற்றாயர்
(D) மேற்காண் எதுவுமன்று

24. Every person who holds any office by virtue of which he is empowered to place or keep any person in confinement.

(A) Public Servant

(B) Police Officer

(C) Government Servant

(D) All of the above

பதவி காரணமாக எவரொருவரையும் அடைத்து வைக்கவோ வைத்திருக்கவோ அதிகாரம் அளிக்கப்பட்டிருந்து, அத்தகைய பதவி எதையும் வகிக்கிற ஆள் ஒவ்வொருவரும்

(A) பொது ஊழியர்

(B) காவல் அதிகாரி

(C) அரசு ஊழியர்

(D) மேற்காண் அனைத்தும்

25. A intentionally causes Z's death, partly by illegally omitting to give Z food, and partly by beating Z. A has committed murder.

(A) IPC S. 33

(B) IPC S. 34

(C) IPC S. 35

(D) IPC S. 36

சட்டத்திற்கு மாறாக 'Z' என்பவருக்கு உணவு கொடுக்காமல் விடுப்பதன் மூலம் பகுதியும், அவரை அடிப்பதன் மூலம் பகுதியுமாக அவரது மரணத்தை விளைவிக்க வேண்டுமென்ற உட்கருத்துடன் 'A' என்பவர் விளைவிக்கிறார். 'A' கொலைக் குற்றம் செய்திருக்கிறார்

(A) இ.த.ச. பிரிவு 33

(B) இ.த.ச. பிரிவு 34

(C) இ.த.ச. பிரிவு 35

(D) இ.த.ச. பிரிவு 36

26. Where no sum is expressed to which a fine may extend, the amount of fine to which the offender is liable is unlimited, but shall not be excessive

(A) IPC S. 64

(B) IPC S. 63

(C) IPC S. 65

(D) IPC S. 66

எந்தத் தொகை வரையிலும் ஓர் அபராதம் போடலாமென்று வெளிப்படையாகக் கூறப்படாதிருப்பினும் குற்றவாளி செலுத்துவதற்கு உள்ளாகிய அபராதத் தொகையானது வரம்பிலதாயிருக்கும் ஆனால், அது மிகையாக இருத்தல் கூடாது

(A) இ.த.ச. பிரிவு 64

(B) இ.த.ச. பிரிவு 63

(C) இ.த.ச. பிரிவு 65

(D) இ.த.ச. பிரிவு 66

27. 'A' is at work with a hatchet, the head flies off and kills a man who is standing by. Here, if there was no want of proper caution on the part of 'A', his act is excusable and not an offence

(A) IPC S. 80 (B) IPC S. 81

(C) IPC S. 82 (D) IPC S. 83

'A' என்வர் ஒரு கைக்கோடாரியுடன் வேலை செய்கிறார். அக்கோடாரியின் தலைப்பாகம் தெறித்து அருகே நின்று கொண்டிருக்கின்றவரைக் கொன்று விடுகிறது. இங்கே 'A' வைப் பொறுத்த வரை, தக்க எச்சரிக்கையின்மை அவரிடம் இல்லை என்றால் அவரது செயல் மன்னித்தற்குரியது, குற்றமாகாது

(A) இ.த.ச. பிரிவு 80 (B) இ.த.ச. பிரிவு 81

(C) இ.த.ச. பிரிவு 82 (D) இ.த.ச. பிரிவு 83

28. 'A' and 'Z' agree to fence with each other for amusement. This agreement implies the consent of each to suffer any harm which, in the course of such fencing, may be caused without foul play; and if A, while playing fairly, hurts Z, A commits no offence.

(A) A commits no offence

(B) A commits offence

(C) A commits no offence u/s 87

(D) Both (A) and (C)

'A' என்பவரும் 'Z' என்பவரும் ஒருவருடன் ஒருவர் பொழுதுபோக்காக வாள்வீச்சுக்கு உடன்படுகின்றனர். அத்தகைய வாள் வீச்சின்போது நியாயமற்ற ஆட்டத்தினால் விளையக்கூடிய எந்தத் தீங்கையும் ஏற்க ஒவ்வொருவரும் இசைந்துள்ளனர் என்பதை உடன்பாடு குறிப்பாய் உணர்த்துகிறது. மற்றும் 'A' நேர்மையாக ஆடும்போது, 'Z' வுக்குக் காயம் ஏற்படுத்துகிறார். 'A' குற்றம் எதுவும் செய்யவில்லை

(A) 'A' குற்றம் எதுவும் செய்யவில்லை

(B) 'A' குற்றம் செய்தவராவார்

(C) பிரிவு A 87 ன் கீழ் குற்றம் எதுவும் செய்யவில்லை

(D) (A) மற்றும் (C) இரண்டும்

29. Z, under the influence of madness; attempts to kill A; Z is guilty of no offence. But A has the same right of private defence which he would have if 'Z' were same

(A) under IPC S. 96
(B) under IPC S. 97
(C) under IPC S. 98
(D) under IPC S. 99

பித்துநிலையின் பாதிப்பால் 'Z' என்பவர், 'A' என்பவரைக் கொல்ல முயல்கிறார். 'Z' ஒரு குற்றத்தையும் செய்யவில்லை. ஆனால், 'Z' புத்தி சுவாதீனமுடையவராயிருந்தால் 'A' எந்தந்த தற்காப்புரிமையைப் பெற்றிருப்பாரோ அதே உரிமையைப் பெற்றிருப்பார்

(A) இ.த.ச. பிரிவு 96 ன் கீழ்
(B) இ.த.ச. பிரிவு 97 ன் கீழ்
(C) இ.த.ச. பிரிவு 98 ன் கீழ்
(D) இ.த.ச. பிரிவு 99 ன் கீழ்

30. 'A' instigates 'B' to murder 'C'. 'B' refuses to do so. 'A' is guilty of abetting 'B' to commit murder

(A) illustration under S.108 of IPC
(B) illustration under S. 109 of IPC
(C) illustration under S. 110 of IPC
(D) illustration under S. 111 of IPC

'C' என்பவரைப் கொலை செய்யும்படி 'B' என்பவரை 'A' என்பவர் தூண்டுகிறார். அவ்வாறு செய்ய 'B' மறுக்கிறார். கொலை செய்ய 'B' வுக்கு 'A' உடந்தைக் குற்றவாளி ஆகிறார்

(A) இ.த.ச. பிரிவு 108 ன் கீழ் எடுத்துக்காட்டு
(B) இ.த.ச. பிரிவு 109 ன் கீழ் எடுத்துக்காட்டு
(C) இ.த.ச. பிரிவு 110 ன் கீழ் எடுத்துக்காட்டு
(D) இ.த.ச. பிரிவு 111 ன் கீழ் எடுத்துக்காட்டு

31. 'A' offers a bribe to 'B', a public servant, as a reward for showing 'A'. Some favour in the exercise of B's official functions. 'B' refuses to accept the bribe. 'A' is punishable under Section

(A) IPC S. 113
(B) IPC S. 114
(C) IPC S. 115
(D) IPC S. 116

ஒரு பொது ஊழியரான 'B', என்பவர், தமது அலுவல்முறைக் கடமைகளைச் செய்வதில் 'A' என்பவருக்கு ஏதேனும் ஒரு சலுகை காட்டுவதற்குச் சன்மானமாக அவருக்கு 'A' லஞ்சம் தர முனைகிறார். 'B' அந்த லஞ்சத்தை ஏற்க மறுத்து விடுகிறார். 'A' இந்தப்பிரிவின் படி தண்டிக்கப்படக் கூடியவராவார்

(A) இ.த.ச. பிரிவு 113
(B) இ.த.ச. பிரிவு 114
(C) இ.த.ச. பிரிவு 115
(D) இ.த.ச. பிரிவு 116

32. The expression "disaffection" includes disloyalty and all feelings of enmity

(A) under IPC 124 (B) under IPC 124 A

(C) under IPC 125 (D) under IPC 126

மனநிறைவின்மை என்னும் சொல் நம்பிக்கை இரண்டகம் மற்றும் எல்லா வகை பகை உணர்ச்சிகள் உள்ளடக்கும்

(A) இ.த.ச. பிரிவு 124 ன் கீழ் (B) இ.த.ச. பிரிவு 124 A ன் கீழ்

(C) இ.த.ச. பிரிவு 125 ன் கீழ் (D) இ.த.ச. பிரிவு 126 ன் கீழ்

33. An assembly of five or more persons is designated an "unlawful assembly" if the common object of the persons composing that assembly is to resist the execution of any law and that is dealt under

(A) IPC S. 141 (B) IPC S. 142

(C) IPC S. 143 (D) IPC S. 144

ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட ஒரு கும்பலைச் சேர்ந்தவர்களது பொதுவான நோக்கம் ஒரு சட்டத்தை செயல்படவிடாமல் தடுப்பதாக இருக்குமானால், அந்தக் கும்பல் "சட்ட விரோதமான கும்பல்" என்று வழங்கப்படும், இ.த.ச. பிரிவு எது ?

(A) இ.த.ச. பிரிவு 141 (B) இ.த.ச. பிரிவு 142

(C) இ.த.ச. பிரிவு 143 (D) இ.த.ச. பிரிவு 144

34. "Treating" means that form of bribery where the gratification consists in food, drink, entertainment, or provision can be brought under :

(A) IPC S. 171 B (B) IPC S. 171 C

(C) IPC S. 171 D (D) IPC S. 171 E

"விருந்தளித்தல்" என்பது, உணவு, பானம், கேளிக்கை அல்லது தேவையைப் பூர்த்தி செய்தல் இவற்றில் ஏதேனுமொன்று கைக்கூலியில் அடங்கியிருக்குமானால், அந்த வகை லஞ்சம் என்று பொருள்படும். இ.த.ச. பிரிவு எது ?

(A) இ.த.ச. பிரிவு 171 B (B) இ.த.ச. பிரிவு 171 C

(C) இ.த.ச. பிரிவு 171 D (D) இ.த.ச. பிரிவு 171 E

35. A, a landholder, knowing of the commission of a murder within the limits of his estate, willfully misinforms the magistrate of the district that the death has occured by accident in consequence of the bite of a snake. A is guilty of the offence defined in this section.

(A) IPC S. 175
(B) IPC S. 176
(C) IPC S. 177
(D) IPC S. 178

'A' என்னும் ஒரு நிலக்கிழார், தமது பண்ணை எல்லைக்குள் ஒரு கொலை செய்யப்பட்டிருப்பதை அறிந்திருந்தும், அந்த மரணம் தற்செயலாக ஒரு பாம்புக் கடியின் விளைவாக நேர்ந்தது என்று வேண்டுமென்றே மாவட்ட நடுவருக்குத் தவறான தகவல் கொடுக்கிறார். இந்தப் பிரிவில் இலக்கணம் கூறப்பட்ட குற்றத்தை புரிந்திருக்கிறார்?

(A) இ.த.ச. பிரிவு 175
(B) இ.த.ச. பிரிவு 176
(C) இ.த.ச. பிரிவு 177
(D) இ.த.ச. பிரிவு 178

36. A, in support of a just claim which B has against Z for one thousand rupees, falsely swears on a trial that he heard Z admit the justice of B's claim. A has given false evidence

(A) IPC S. 191
(B) IPC S. 192
(C) IPC S. 193
(D) IPC S. 194

Z க்கு எதிரான ரூபாய் ஓராயிரத்திற்காக 'B' வின் நியாயமான கோரிக்கைக்கு ஆதரவாக 'A' ஒரு விசாரணையின் போது, 'B' வின் கோரிக்கையின் நியாயத்தை 'Z' ஒப்புக்கொண்டதைத் தாம் கேட்டதாகப் பொய்யாக மெய்யுறுதி செய்கிறார். 'A' பொய்ச் சாட்சியம் கூறியவராகிறார்

(A) இ.த.ச. பிரிவு 191
(B) இ.த.ச. பிரிவு 192
(C) இ.த.ச. பிரிவு 193
(D) இ.த.ச. பிரிவு 194

37. Assault can be caused by

(A) Gestures
(B) Preparations
(C) Both (A) and (B)
(D) Neither (A) nor (B)

தாக்குதல் ஏற்படுத்தப்படுவது

(A) சைகைகள் மூலம்
(B) ஆயத்தம் மூலம்
(C) (A) மற்றும் (B) இரண்டும்
(D) (A) மற்றும் (B) இரண்டும் அல்ல

38. Culpable homicide not amounting to murder is punishable with

(A) death

(B) imprisonment for life

(C) imprisonment for life or imprisonment for ten years

(D) imprisonment for 10 years

கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றத்திற்குத் தண்டனை

(A) மரண தண்டனை

(B) ஆயுள் சிறை

(C) ஆயுள் சிறை அல்லது 10 வருட சிறைத்தண்டனை

(D) 10 வருட சிறைத் தண்டனை

39. A, knowing that B has murdered Z, assists B to hide the body with the intention of screening B from punishment. 'A' is liable to imprisonment of either description for seven years, and also to fine

(A) IPC S. 201

(B) IPC S. 202

(C) IPC S. 203

(D) IPC S. 204

'B' என்பவர் 'Z' என்பவரைக் கொலை செய்திருக்கிறார் என்பதை அறிந்தே, 'B' வைத் தண்டனையிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற உட்கருத்துடன், அந்த உடலை மறைத்து வைப்பதற்கு 'A' உதவுகிறார், அவர் ஏழு ஆண்டு காலத்திற்குச் சிறைத்தண்டணை வகைகள் இரண்டில் ஒன்றுக்கும் அபராதத்திற்கும் கூட உள்ளாகிறார். பிரிவு எது?

(A) இ.த.ச. பிரிவு 201

(B) இ.த.ச. பிரிவு 202

(C) இ.த.ச. பிரிவு 203

(D) இ.த.ச. பிரிவு 204

40. A person commits this offence who counterfeits by causing a genuine stamp of one denomination to appear like a genuine stamp of a different denomination

(A) Explanation under IPC S. 255

(B) Explanation under IPC S. 256

(C) Explanation under IPC S. 257

(D) Explanation under IPC S. 258

ஒரு குறித்த மதிப்புடைய அசல் முத்திரை வேறொரு மதிப்புடைய அசல் முத்திரை போலத் தோன்றும்படி கள்ளத்தனமாகத் தயாரிப்பவர் இக்குற்றத்தைச் செய்பவராகிறார்

(A) இ.த.ச. பிரிவு 255 ன் கீழ் விளக்கம்

(B) இ.த.ச. பிரிவு 256 ன் கீழ் விளக்கம்

(C) இ.த.ச. பிரிவு 257 ன் கீழ் விளக்கம்

(D) இ.த.ச. பிரிவு 258 ன் கீழ் விளக்கம்

41. A without any excuse fires a loaded cannon into a crowd of persons and kills one of them. A is guilty of murder, although he may not have had a premeditated design to kill any particular individual.

(A) Offence under IPC S. 300
(B) Offence under IPC S. 301
(C) Offence under IPC S. 302
(D) Offence under IPC S. 299

ஆட்கள் கூடிய ஒரு கூட்டத்திற்குள் காரணமேதுமின்றி, ஒரு வெடிமருந்து அடைக்கப்பட்ட பீரங்கியைச் சுட்டு, கூட்டத்தில் ஒருவரை 'A' கொன்றுவிடுகிறார் 'A' எந்தத் தனிப்பட்ட ஒருவரையும் கொல்லுவதற்கு முன் கூட்டித் திட்டமிட்டவராக இல்லாதிருக்கக் கூடுமாயினும், கொலைக் குற்றத்தைச் செய்தவராவார்

(A) இ.த.ச. பிரிவு 300 ன் கீழ் குற்றம்
(B) இ.த.ச. பிரிவு 301 ன் கீழ் குற்றம்
(C) இ.த.ச. பிரிவு 302 ன் கீழ் குற்றம்
(D) இ.த.ச. பிரிவு 299 ன் கீழ் குற்றம்

42. 'A' instigates 'B' to murder 'C'. The offence is not committed. A is liable to imprisonment for a term which may extend to

(A) 10 years
(B) 14 years
(C) 7 years
(D) 12 years

'இ' யினை கொல்லுமாறு 'ஆ' வினை 'அ' தூண்டுகிறார். குற்றம் செய்யப்படவில்லை 'அ' எத்தனை வருடங்களுக்கு நீட்டிக்கத்தக்க சிறைத்தண்டனைக்குள்ளாவார்

(A) 10 வருடங்கள்
(B) 14 வருடங்கள்
(C) 7 வருடங்கள்
(D) 12 வருடங்கள்

43. A, on grave and sudden provocation, fires a pistol at Z, under such circumstances that if he thereby caused death he would be guilty of culpable homicide not amounting to murder. A has committed the offence defined in this Section.

(A) IPC S. 307
(B) IPC S. 308
(C) IPC S. 300
(D) IPC S. 299

எந்தச் சூழ்நிலையில் அதனால் மரணம் விளைவித்தால் கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றம் செய்தவராவாரோ, அந்தச் சூழ்நிலையில் கடுமையான மற்றும் திடீரென ஏற்பட்ட ஆத்திரமூட்டுதலினால் 'A' என்பவர் 'Z' பார்த்துக் கைத்துப்பாக்கியால் சுடுகிறார் 'A' இந்தப் பிரிவில் இலக்கணம் கூறப்பட்டுள்ள குற்றத்தைச் செய்தவராவார்

(A) இ.த.ச. பிரிவு 307
(B) இ.த.ச. பிரிவு 308
(C) இ.த.ச. பிரிவு 300
(D) இ.த.ச. பிரிவு 299

44. Under Section 354-D of IPC stalking means :

(A) By Internet e-mail or electronic

(B) Spying

(C) Both (A) and (B)

(D) None of the above

இ.த.ச. பிரிவு 354 D பின் தொடர்தல் என்பது

(A) இணைய தளம், மின்னஞ்சல் அல்லது மின்னனு மூலம்

(B) ஒற்றாய்வு

(C) (A) மற்றும் (B) இரண்டும்

(D) மேற்காண் எதுவுமன்று

45. A places men with fire arms at the outlets of a building, and tells Z that they will fire at Z if Z attempts to leave the building. The act of 'A' amounts to

(A) A wrongfully confines Z

(B) Offence under IPC S. 340

(C) Wrongful restraint

(D) Both (A) and (B)

ஒரு கட்டிடத்தின் எல்லாச் செல்வாயில்களிலும் 'A' என்பவர் ஆட்களைத் துப்பாக்கிகளுடன் நிறுத்தி வைத்து, அந்தக் கட்டிடத்தை விட்டு வெளியேற 'Z' முயன்றால் 'Z' வை அவர்கள் சுடுவார்கள் என்று 'Z' விடம் கூறுகிறார். 'A' வின் நடவடிக்கையானது

(A) 'Z' வை 'A' சட்ட விரோதமாக அடைத்து வைக்கிறார்

(B) இ.த.ச. பிரிவு 340 ன் கீழ் குற்றம்

(C) சட்ட விரோத தடுப்பு

(D) (A) மற்றும் (B) இரண்டும்

46. Habitually dealing in stolen property is dealt under

(A) Section 411 of IPC

(B) Section 412 of IPC

(C) Section 413 of IPC

(D) Section 414 of IPC

வாடிக்கையாக திருட்டுப் பொருளை கையாளுதல்

(A) இ.த.ச. பிரிவு 411

(B) இ.த.ச. பிரிவு 412

(C) இ.த.ச. பிரிவு 413

(D) இ.த.ச. பிரிவு 414

47. 'A' finds a ring belonging to 'Z' on a table in the house which Z occupies. Here the ring is in Z's possession, and if A dishonestly removes it, A commits thefts. Under which Section of IPC.

(A) 'A' commits theft under S. 375

(B) 'A' commits theft under S. 376

(C) 'A' commits theft under S. 377

(D) 'A' commits theft under S. 378

'Z' என்பவர் வசிக்கிற வீட்டில் ஒரு மேஜையின் மீது 'Z' வுக்குச் சொந்தமான ஒரு மோதிரத்தை 'A' என்பவர் பார்க்கிறார். இங்கு, அந்த மோதிரம் 'Z' வின் வசம் இருக்கிறது அதை நேர்மையற்ற முறையில் 'A' அப்புறப்படுத்தினால் 'A' திருட்டுக் குற்றத்தை எந்த இ.த.ச. பிரிவின் கீழ் செய்தவர் ஆவார்

(A) இ.த.ச. பிரிவு 375 ன் கீழ் திருட்டு

(B) இ.த.ச. பிரிவு 376 ன் கீழ் திருட்டு

(C) இ.த.ச. பிரிவு 377 ன் கீழ் திருட்டு

(D) இ.த.ச. பிரிவு 378 ன் கீழ் திருட்டு

48. In all robbery there is either theft or exortion

(A) Correct (B) Not Correct

(C) Theft only (D) None of the above

எல்லாவிதமான கொள்ளையிலும் திருட்டு அல்லது அச்சுறுத்திப் பறித்தல் அடங்கியிருக்கிறது

(A) மிகவும் சரி (B) தவறு

(C) திருட்டு மட்டும் (D) மேற்காண் எதுவுமன்று

49. 'A' finds a valuable ring, not knowing to whom it belongs. 'A' sells it immediately without attempting to discover the owner. 'A' is guilty of an offence under this Section

(A) IPC S. 401 (B) IPC S. 402

(C) IPC S. 403 (D) IPC S. 404

விலையுயர்ந்த மோதிரமொன்றை அது யாருக்குச் சொந்தமானது என்று தெரியாமல் 'A' கண்டெடுக்கிறார். சொந்தக்காரரை கண்டுபிடிக்க முயற்சிக்கமால் 'A' அதை உடனே விற்று விடுகிறார். எந்த பிரிவின் படி 'A' குற்றம் செய்தவராகிறார்

(A) இ.த.ச. பிரிவு 401 (B) இ.த.ச. பிரிவு 402

(C) இ.த.ச. பிரிவு 403 (D) இ.த.ச. பிரிவு 404

50. 'A' cheats by pretending to be B, a person who is deceased. 'A' cheats by personation.

(A) Offence under S. 420
(B) Offence under S. 415
(C) Offence under S. 416
(D) Offence under S. 414

இறந்துபோன 'B' தாமே என்று 'A' பாவனை செய்து ஏமாற்றுகிறார். 'A' ஆள்மாறாட்டத்தால் ஏமாற்றுகிறார். இ.த.ச. பிரிவு எது?

(A) இ.த.ச. பிரிவு 420 ன் கீழ் குற்றம்
(B) இ.த.ச. பிரிவு 415 ன் கீழ் குற்றம்
(C) இ.த.ச. பிரிவு 416 ன் கீழ் குற்றம்
(D) இ.த.ச. பிரிவு 414 ன் கீழ் குற்றம்

51. 'A' signs his own name to a bill of exchange, intending that it may be believed that the bill was drawn by another person of the same name. 'A' has committed forgery

(A) Offence under S. 463
(B) Offence under S. 464
(C) Offence under S. 465
(D) Offence under S. 466

ஒரு மாற்றுச் சீட்டில் தமது சொந்தப் பெயரில், அந்த சீட்டு அதே பெயருடைய வேறு ஒருவரால் வரையப்பட்டதாக நம்பப்படலாம் என்ற உட்கருத்துக் கொண்டு 'A' கையொப்பமிடுகிறார். 'A' பொய்யாவணம் செய்தவராகிறார்

(A) இ.த.ச. பிரிவு 463 ன் கீழ் குற்றம்
(B) இ.த.ச. பிரிவு 464 ன் கீழ் குற்றம்
(C) இ.த.ச. பிரிவு 465 ன் கீழ் குற்றம்
(D) இ.த.ச. பிரிவு 466 ன் கீழ் குற்றம்

52. 166-B punishment for non-treatment of victim was inserted by

(A) Criminal Law Amendment Act 2013
(B) Criminal Law Amendment Act 2006
(C) Criminal Law Amendment Act 2005
(D) None of the above

பிரிவு 166-B பாதிப்புற்றவரை மருத்துவச் சிகிச்சை செய்யாமலிருத்தலுக்கான தண்டனை சேர்க்கப்பட்டது

(A) குற்றவியல் சட்டத் திருத்தம் 2013
(B) குற்றவியல் சட்டத் திருத்தம் 2006
(C) குற்றவியல் சட்டத் திருத்தம் 2005
(D) மேற்காண் எதுவுமன்று

53. A, for the purpose of inducing B to desist from prosecuting a civil suit threatens to burn B's house. A is guilty of criminal intimidation.

(A) Offence under S. 501

(B) Offence under S. 502

(C) Offence under S. 503

(D) Offence under S. 504

ஓர் உரிமை வழக்கை நடத்துவதைத் தவிர்க்க 'B' யை இனங்கச் செய்யும் பொருட்டு 'B' வின் வீட்டை எரித்து விடுவதாக 'A' அச்சுறுத்துகிறார். 'A'. குற்றமுறு மிரட்டலைச் செய்கிறார்

(A) இ.த.ச. பிரிவு 501 ன் கீழ் குற்றம்

(B) இ.த.ச. பிரிவு 502 ன் கீழ் குற்றம்

(C) இ.த.ச. பிரிவு 503 ன் கீழ் குற்றம்

(D) இ.த.ச. பிரிவு 504 ன் கீழ் குற்றம்

54. 'A' Municipal Commissioner is a public servant

(A) True

(B) False

(C) Partly True

(D) None of the above

ஒரு நகராட்சி ஆணையாளர் ஒரு பொது ஊழியராவார்

(A) உண்மை

(B) தவறு

(C) பகுதி உண்மை

(D) மேற்காண் எதுவுமன்று

55. It is not essential to counterfecting that the imitation should be exact. This statement

(A) True

(B) False

(C) Partly True

(D) None of the above

கள்ளத்தயாரிப்புக்கு போலித் தயாரிப்பு, துல்லியமாக இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. இந்த வாசகம்

(A) உண்மை

(B) தவறு

(C) பகுதி உண்மை

(D) மேற்காண் எதுவுமன்று

56. That this exception shall not extend to the abetment of any offence, to the committing of which offence it would not extend

(A) IPC S. 89 Exception 1

(B) IPC S. 89 Exception 2

(C) IPC S. 89 Exception 3

(D) IPC S. 89 Exception 4

எந்த ஒரு குற்றத்தின் மீது இந்த விலக்கு இயங்காதோ, அந்தக் குற்றத்திற்கு உடந்தையாயிருக்கும் குற்றத்தின் மீதும் இந்த விலக்கு இயங்காது

(A) இ.த.ச. பிரிவு 89 விலக்கு 1

(B) இ.த.ச. பிரிவு 89 விலக்கு 2

(C) இ.த.ச. பிரிவு 89 விலக்கு 3

(D) இ.த.ச. பிரிவு 89 விலக்கு 4

57. IPC Section 153-AA punishment for knowingly carrying arms in any procession or organising or holding or taking part in any mass drill or mass training with arms was inserted by

(A) Criminal Law Amendment Act 2013

(B) Criminal Law Amendment Act 2006

(C) Criminal Law Amendment Act 2005

(D) None of the above

இ.த.ச. பிரிவு 153 அ.அ. ஏதேனும் ஊர்வலத்தில் அறிந்தே ஆயுதங்களை கொண்டு செல்வதற்கு அல்லது ஏதேனும் பெருமக்கள் கவாத் அல்லது ஆயுதங்களுடன் பெரும் பயிற்சி ஏற்பாடு செய்தலுக்கு அல்லது நடத்துவதற்கு அல்லது கலந்து கொள்வதற்கு தண்டணை சேர்க்கப்பட்ட திருத்தம்

(A) குற்றவியல் சட்டத் திருத்தம் 2013

(B) குற்றவியல் சட்டத் திருத்தம் 2006

(C) குற்றவியல் சட்டத் திருத்தம் 2005

(D) மேற்காண் எதுவுமன்று

58. IPC Section 228-A disclosure of identity of the victim of certain offences etc., was inserted by

(A) Criminal Law Amendment Act 2013

(B) Criminal Law Amendment Act 2006

(C) Criminal Law Amendment Act 2005

(D) None of the above

இ.த.ச. பிரிவு 228 அ. சில குற்றங்கள் முதலானவற்றில் பாதிப்புற்றவரின் அடையாளத்தினை வெளிப்படுத்துதல் எப்பொழுது சேர்க்கப்பட்டது

(A) குற்றவியல் சட்டத் திருத்தம் 2013

(B) குற்றவியல் சட்டத் திருத்தம் 2006

(C) குற்றவியல் சட்டத் திருத்தம் 2005

(D) மேற்காண் எதுவுமன்று

59. A woman who causes herself to miscarry, is within the meaning of this Section

(A) IPC S. 312

(B) IPC S. 313

(C) IPC S. 314

(D) IPC S. 315

தானே கருச்சிதைவு விளைவித்துக் கொள்ளும் ஒரு பெண் இந்தப் பிரிவின் பொருளில் அடங்கியவராவார்

(A) இ.த.ச. பிரிவு 312

(B) இ.த.ச. பிரிவு 313

(C) இ.த.ச. பிரிவு 314

(D) இ.த.ச. பிரிவு 315

60. IPC Section 354-C Voyeurism means and includes

(A) Adultery

(B) Watching Private Act

(C) Inserted by Amendment Act 2013

(D) Both (B) and (C)

பிரிவு 354 C பிறழ் பாலுணர்வு என்பது மற்றும் உள்ளடக்கியது

(A) பிறன்மனை புணர்வு

(B) தனிமுறை செய்கை கண்காணித்தல்

(C) சட்டத் திருத்தம் 2013 ல் புகுத்தப்பட்டது

(D) (B) மற்றும் (C) இரண்டும்

61. 'A' puts jewels into a box belonging to Z, with the intention that they may be found in that box, and that this circumstance may cause Z to be convicted of theft. 'A' has committed

(A) 'A' has given false evidence

(B) 'A' has committed an offence under Section 420, IPC

(C) 'A' has fabricated false evidence

(D) None of above

'Z' என்வருக்குச் சொந்தமான ஒரு பெட்டியில் நகைகளை, அந்தப் பெட்டியில் அவை காணப்படலாம் என்றும், அந்த சூழ்நிலை 'Z' திருட்டுக் குற்றத்திற்காகத் தீர்ப்புத் தண்டனை பெறுவதற்குக் காரணமாகலாம் என்கிற உட்கருத்துடன் 'A' செயல்பட்டால்

(A) 'A' பொய் சாட்சியம் அளித்திருக்கிறார்

(B) இ.த.ச. பிரிவு 420 ன் கீழ் 'A' ஓர் குற்றம் புரிந்தவர்

(C) 'A' என்பவர் பொய் சாட்சியம் புனைந்திருக்கிறார்

(D) மேற்காண் எதுவுமன்று

62. Illegal payments in connection with elections is dealt under

(A) Prevention of Money Laundering Act

(B) Representation of People Act

(C) Indian Penal Code

(D) All of above

தேர்தல் தொடர்பாக சட்டவிரோத பணச் செலுத்தம் கையாளப்படுவது

(A) பணமாற்று மோசடி தடைச் சட்டம்

(B) மக்கள் சார்பாற்றுநர் சட்டம்

(C) இந்திய தண்டனைச் சட்டம்

(D) மேற்காண் அனைத்தும்

63. Absconding to avoid service of summons or other proceedings is stated under

(A) Section 171 of IPC
(B) Section 172 of IPC
(C) Section 173 of IPC
(D) Section 174 of IPC

அழைப்பாணை அல்லது மற்ற நடவடிக்கையைச் சார்வு செய்வதைத் தவிர்க்கத் தலைமறைவாதல் எந்தப் பிரிவின் கீழ் கையாளப்படுகிறது?

(A) இ.த.ச. பிரிவு 171
(B) இ.த.ச. பிரிவு 172
(C) இ.த.ச. பிரிவு 173
(D) இ.த.ச. பிரிவு 174

64. Failure to appear at specified place and specified time as required by a proclamation published under sub-section (1) of section 82 of this code a dealt under

(A) Section 172-A of IPC
(B) Section 173-A of IPC
(C) Section 174-A of IPC
(D) Section 175-A of IPC

கு.வி.மு.ச. பிரிவு 82 உட்பிரிவு (1) ன் கீழ் அரசு பொது அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் நேரில் தோன்றிடத் தவறுவாராயின் எந்தப் பிரிவின் கையாளப்படுகிறது

(A) இ.த.ச. பிரிவு 172 A
(B) இ.த.ச. பிரிவு 173 A
(C) இ.த.ச. பிரிவு 174 A
(D) இ.த.ச. பிரிவு 175 A

65. Which of the following may be said to be non compos mentis (not of sound mind)

(A) Drunk

(B) Made non compos by illness

(C) Lunatic or a madman

(D) All the above

கீழ்க்கண்டவற்றுள் எது நேர்புத்தி இல்லா நிலை என சொல்லப்படுகிறது?

(A) குடிபோதை/மது மயக்கம்

(B) நோயுற்றதனால் நேர்புத்தி இல்லா நிலை

(C) மனநோய் அல்லது ஓர் பைத்தியகாரர்

(D) மேற்காண் அனைத்தும்

66. False statements made in any declaration, which is by law receivable as evidence is dealt under which section?

(A) Section 199 of IPC

(B) Section 200 of IPC

(C) Section 201 of IPC

(D) Section 202 of IPC

ஏதேனும் விளம்புகையில் சட்டத்தினால் சாட்சியமாக பெறத்தக்க பொய்யான விவர உரைகள் எந்தப் பிரிவின் கீழ் கையாளப்படுகின்றன?

(A) இ.த.ச. பிரிவு 199

(B) இ.த.ச. பிரிவு 200

(C) இ.த.ச. பிரிவு 201

(D) இ.த.ச. பிரிவு 202

67. Who among the following is known as the architect of the Indian Penal code, 1860?

(A) Sir James fitz Stephen

(B) Lord Macaulay

(C) Sir William Blackstone

(D) Courtney Stanhope Kenny

இந்திய தண்டனைச் சட்டம் 1860 உருவாக்கிய சிற்பி யார்?

(A) சர் ஜேம்ஸ் பிஜ் ஸ்டீபன்

(B) லார்ட் மாகுலே

(C) சர் வில்லியம் பிளாக் ஸ்டோன்

(D) கர்ட்னி ஸ்டான்ஹோப் கென்னி

68. The exercise of criminal jurisdiction depends upon the

(A) Place of the offence

(B) Nationality of the offender

(C) Domicile of the offender

(D) None of the above

குற்றவியல் ஆள்வரையினை செயலுறுத்துவதானது எதன் பொறுத்து

(A) குற்ற நிகழ்விடம்

(B) குற்றவாளியின் நாட்டினம்

(C) குற்றவாளியின் வசிப்பிடம்

(D) மேற்காண் எதுவுமன்று

69. The aim of criminal law is

(A) Compensation

(B) Damages

(C) Punishment

(D) None of the above

குற்றவியல் சட்டத்தின் நோக்கம்

(A) சரியீடு/நிறையீடு

(B) இழப்பீடுகள்

(C) தண்டனை

(D) மேற்காண் எதுவுமன்று

70. Criminal conspiracy is a

(A) Rule of evidence

(B) Substantive offence

(C) Defining clause

(D) None of the above

குற்றமுறு கூட்டுச் சதி ஓர்

(A) சாட்சிய விதி

(B) தனி நிலையான குற்றம்

(C) வரையறுத்துக் கூறு

(D) மேற்காண் எதுவுமன்று

71. In criminal conspiracy

(A) There is no actus reus

(B) The agreement is the actus reus

(C) Mental element is sufficient

(D) None of the above

குற்றமுறு சதியில்

(A) தீச்செயல் எதுவுமில்லை

(B) உடன்பாடு தீச்செயலாகும்

(C) மனதளவில் மூலப்பொருள் போதுமானது

(D) மேற்காண் எதுவுமன்று

72. Offence under section 120B is

(A) Compoundable

(B) Non- compoundable

(C) Depending on the offence

(D) None of the above

பிரிவு 120B யின் கீழான குற்றம்

(A) சமரசம் செய்து கொள்ளக் கூடியது

(B) சமரசம் செய்து கொள்ளக் கூடியதல்ல

(C) குற்றத்தினைப் பொறுத்து

(D) மேற்காண் எதுவுமன்று

73. The Indian Penal Code came into operation on

(A) 1 January 1861

(B) 6 October 1860

(C) 1 January 1862

(D) 16 October 1862

இந்திய தண்டனைச் சட்டம் செல்லாற்றலுக்கு வந்த தேதி

(A) 1, ஜனவரி 1861

(B) 6, அக்டோபர் 1860

(C) 1, ஜனவரி 1862

(D) 16, அக்டோபர் 1862

74. Traditional crimes like murder, rape, theft etc are called

(A) Mala in Se

(B) Mala in prohibita

(C) Both (A) and (B) are correct

(D) None of the above

கொலை, வன்புணர்ச்சி, திருட்டு முதலிய மரபுசார் குற்றங்கள் ———————— என அழைக்கப்படுகின்றன.

(A) இயல்புத் தீங்குகள்

(B) விலக்குத் தீங்குகள்

(C) (A) மற்றும் (B) இரண்டும் சரி

(D) மேற்காண் எதுவுமன்று

75. Which of the following are the essential ingredients of a crime?

(A) Motive, mens rea, actus reus

(B) Mens rea and actus reus

(C) Preparation, attempt and commission

(D) None of the above

கீழ்க்கண்டவற்றுள் ஓர் குற்றத்திற்கான முக்கிய ஆக்கக் கூறுகள் எது?

(A) குறிநோக்கம், குற்றமனம், தீச்செயல்

(B) குற்றமனம் மற்றும் தீச்செயல்

(C) ஆயத்தம், முயற்சி மற்றும் செய்கை

(D) மேற்காண் எதுவுமன்று

76. 'Dowry death' is dealt under

(A) Section 304-B of IPC
(B) Section 303-B of IPC
(C) Section 305-B of IPC
(D) Section 307-B of IPC

'வரதட்சணை மரணம்' எதன் கீழ் கூறப்பட்டுள்ளது

(A) இ.த.ச. பிரிவு 304-B
(B) இ.த.ச. பிரிவு 303-B
(C) இ.த.ச. பிரிவு 305-B
(D) இ.த.ச. பிரிவு 307-B

77. The essence of unlawful assembly is that the members must have a

(A) Common intention
(B) Common object
(C) Common agreement
(D) None of the above

உறுப்பினர்களின் சட்ட விரோத கூட்டத்தின் முக்கியமாக இருத்தல் வேண்டும்

(A) பொது உட்கருத்து
(B) பொது நோக்கம்
(C) பொது உடன்பாடு
(D) மேற்காண் எதுவுமன்று

78. Which of the following chapters in the Indian penal code deals with 'offences against public trans quality'?

(A) Chapter V
(B) Chapter VI
(C) Chapter VII
(D) Chapter VIII

இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ்க்கண்டவற்றுள் எந்த அத்தியாயம் "பொது அமைதிக்கு விரோதமான குற்றங்கள்" பற்றி கையாளுகிறது?

(A) அத்தியாயம் V
(B) அத்தியாயம் VI
(C) அத்தியாயம் VII
(D) அத்தியாயம் VIII

79. Which of the following offence cannot be committed in a private place?

(A) Rioting

(B) Affray

(C) Assault

(D) None of the above

கீழ்க்காண் குற்றத்தினில் எது தனியார் இடத்தில் செய்யப்பட முடியாது?

(A) கலகம்

(B) சச்சரவு

(C) வன் தாக்குதல்

(D) மேற்காண் எதுவுமன்று

80. An affidavit is evidence within the meaning of section 191 of the Indian Penal code. The statement is

(A) True

(B) False

(C) Partly True

(D) None of the above

இ.த.ச. பிரிவு 191 ன் பொருளமைவில் மெய்யுறுதி ஆவணம் ஓர் சாட்சியமாகும். இந்த வாசகம்

(A) உண்மை

(B) தவறு

(C) பகுதி உண்மை

(D) மேற்காண் எதுவுமன்று

126/DD/20

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## THE CRIMINAL JUDICIAL TEST PART – I INDIAN PENAL CODE (DETAILED APPLICATIONS)

(With Books)

Maximum Time : 30 minutes Maximum Marks : 20

## *IMPORTANT INSTRUCTIONS*

### DESCRIPTIVE TYPE
### விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.
விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).
விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

Write any FOUR questions.

எவையேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கவும். (4 × 5 = 20)

1. State briefly the provisions of the Indian Penal Code regarding offences against public peace.

பொது அமைதிக்கு எதிரான குற்றங்கள் குறித்து இந்திய தண்டனை சட்டத்தில் கூறியுள்ள சட்ட வகைமுறைகளை சுருக்கமாக எடுத்துக் கூறுக.

2. Explain the circumstances under which a person can exceed his right of private defense of body and property upto causing death.

எந்தெந்தச் சூழ்நிலைகளில் ஒருவர் தனது உடல் மற்றும் உடமைத் தற்காப்புரிமையை மரணம் விளைவிக்கும் அளவிற்குப் பயன்படுத்தலாம்?

3. Explain the law relating to criminal conspiracy under the law of crimes.

குற்றவியல் சட்டத்தில் குற்றமுறு சதி தொடர்பான சட்ட விளக்கங்களை கூறுக.

4. Write short notes on:

(a) Abetment

(b) Election offences

சிறு குறிப்பு வரைக :

(அ) குற்ற உடந்தை

(ஆ) தேர்தல் தொடர்பானக் குற்றங்கள்.

5. What is defamation under the law of crimes? State its exceptions.

குற்றவியல் சட்டத்தின் கீழ் அவதூறு என்றால் என்ன? அதன் விதிவிலக்கினை கூறுக.

6. Distinguish between culpable homicide and murder.

வேறுபடுத்திக் காட்டுக : மரணம் விளைவிக்கக் கூடிய குற்றம் மற்றும் கொலை.